**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.63/2012**
**Connected with OS.208/2011**

2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.07.2025 | தகப்பனார் பெயர்: | முனியாண்டி |
| பெயர்: | பாலசுந்தர் (DW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | கொளத்தூர் | சமயம்: | |
| தொழில்: | விவசாயம் | வயது : | 55/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 07.07.2025</u>**

1. பி.வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யும்போது பாபு என்பவரின் அடையாள அட்டை ஏதேனும் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் 2–ம் பிரதிவாதி, அனது வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டடை, ஆதார் அட்டை இவற்றை என்னிடம் ஒப்டைத்தாரா என்றால் ஆமாம். பாபு அவர்களின் மேற்படி மூன்று அட்டைகளையும் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. ஆனால் அவர் என்னிடம் கொடுத்த அடையாள அட்டைகளின் நகல்கள் உள்ளன அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். மேற்கண்ட ஆவணத்தில் வாக்காளர் அடையாள அட்டை மட்டும் என்னிடம் கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2–ம் பக்கத்தில் எனக்கும், 2–ம் பிரதிவாதி பாபுவிற்கும் அடையாள அட்டையாக வாக்காளர் அடையாள அட்டைதான் சரிபார்க்கப்பட்டது என்று சார் பதிவாளர் அலுவலகத்தால் குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

2. பாபுவின் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை மற்றும் பள்ளி சான்றிதழ் இவற்றில் அவரின் தகப்பனார் பெயர் சின்னையன் என்றுதான் உள்ளது என்றால் சரியல்ல. பாபுவின் தந்தை பெயர் சிவா என்பதற்கான ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். சிவா என்பவரின் ம னைவி கலா என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய இயலுமா என்றால் என்னிடம் சிவாவின் குடும்ப அட்டை உள்ளது தாக்கல் செய்ய இயலும். சிவாவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கலாவின் இறப்பு சான்றிதழும் மற்றும் வாரிசு சான்றிழுதம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிவா மற்றும் கலா ஆகியோர் இறந்த தேதி பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்தில் பாபு என்பவர் கிருஷ்ணம்மாளின் வாரிசு என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

3. பாபு என்பவர் கிருஷ்ணம்மாள் என்பவருக்கு வாரிசு என்று எவ்வித சட்ட முகாந்திரமும் இல்லாமல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பாபு இந்த வழக்கில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பாபு இந்த வழக்கில் எனது கட்சியை நிரூபிக்க அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான்தான் இந்த வழக்கு சொத்தின் உரிமையாளர் என விளம்புகை செய்வதற்கு எவ்வித ஆதாரமும் இல்லாமல் நான் நிவாரணம் கேட்டுள்ளேனா என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரத்திற்கு நான் நீதிமன்ற கட்டணம் கட்டவில்லை அதனால் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என்னுடைய அனுபவம் என்பது ஆக்கிரமிப்பாக தான் கருதப்படுமே தவிர உரிமையாளராக கருத முடியாது என்றாலும் அதனையொட்டி உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றாலும் சரியல்ல.

4. வாதிகள் இந்த வழக்கை தொடர எந்தவித சட்டரீதியான முகாந்திரமும் கிடையாது என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பாபுவிற்கே இந்த வழக்கு சொத்தில் உரிமை மூலம் எதுவும் இல்லாதபோது அவரிடமிருந்து வழக்கு சொத்தை நான் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல. நான் எடுத்துள்ள கட்சி பொய்யான கட்சி என்பதால் அ.வ.208/2011 வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், அ.வ.63/2012 வழக்கை தீர்ப்பாணை செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது. வைக்கப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை**